நேரத்திலே மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுகிறார்; அவர் அடிபட்ட விதம் அல்லது அடிபட்ட இடம் இதைப் பொறுத்தும்—அடிபட்ட இடம் என்று சொன்னால் அவர் உடலிலே பாதிக்கப்பட்ட இடம் — இவற்றைப் பொறுத்துத்தான் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது. சில நேரங்களிலே ஹெட் இன்ஜுரி ஏற்பட்டுவிட்டால் மிகத் திறமையான டாக்டர்கள் எவ்வளவு முயற்சி எடுத்தாலும்கூட காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. சில நேரங்களிலே மிக தூரத்திலே இருந்து மருத்துவ மனைக்கு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டால், வருவதற்குள்ளாகவே அதிகமான ரத்தம் வீணாகி, காப்பாற்ற முடியாமல் போகிறது. இருந்தாலும், அரசு மருத்துவர்கள் காரணமாகவோ அல்லது அவர்களுடைய பணியின் காரணமாகவோ ஏதாவது இந்த மாதிரி ஏற்பட்டால், நிச்சயமாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டு, சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதிலே 10 சதவிகிதத்தையும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 206. திருமதி ஆர். சாவித்திரி அம்மாள். மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

206—

மணம்பூண்டியில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

***37141**—*திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் :*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணம்பூண்டி கிராமத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக கிளை பணிமனை திருக்கோவிலூரில் நிறுவுதற்காக திருக்கோவிலூர் வட்டம், மணம்பூண்டி கிராமம் புல எண்.80/6-ல் 1.58.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி நிலத்தினை நிலக்கையக சட்டப்பிரிவின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கைகள் வருவாய் துறையினரின் பரிசீலனையில் உள்ளது. நில

ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் பணிமனை நிறுவுவதற்கான கட்டுமானப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்தப் பணிமனையின் கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்று அமைச்சரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அந்தக் கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிமனையின் கட்டுமானப் பணிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். மதிப்பீடுகளினுடைய குறிப்பு என்னிடத்தில் இல்லை. இந்த ஆண்டு அந்தப் பணிமனையைக் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 207, திரு. க. பழனிசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

207—

எடப்பாடி தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்தல்

***34237**—திரு. க. பழனிசாமி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, பள்ளிபட்டியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.